# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 53/2018 குருசாமி (வாசா) தேதி:03.12.2024**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

தாவாசொத்தின் விஸ்தீரணம் 23 செண்ட் ஆகும். தாவாசொத்து ஆதியில் ஆண்டிக்கோனார் மகன் குருசாமி கோனார் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. குருசாமி கோனார் பெயரில் உள்ள பட்டா சம்பந்தமான வட்டாட்சியரிடம் மனு ஏதாவதுகொடுத்தேனா என்றால் இல்லை. தாவா கோவிலில் அக்தர் யார் என்றால் நான்தான். தாவாசொத்தில் உள்ள கோவில் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் 1912 ம் வருடம் கட்டப்பட்டது. அந்த கோவில் சிதிலமடைந்து உடைந்தநிலையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 1912 ம் வருடம் புதிதாக கோவில் கட்டினேன். அவ்வாறு கோவில் கட்டியபோது நன்கொடையாளர்களிடம் நன்கொடை வாங்கிகட்டினேன் என்றால் எனது பங்காளிகளிடம்தான் வாங்கினேன். வேறு யாரிடமும் வாங்கவில்லை. அவ்வாறு கோவில் கட்டியதற்கு ரூபாய் 12 லட்சம் வரை செலவு ஏற்பட்டது. அந்த செலவுத்தொகையை எனது பங்காளிகள் மட்டுமே கொடுக்கவில்லை என்றாலும் இதர நபர்களிடமும் நன்கொடை வாங்கித்தான் கட்டப்பட்டது என்றாலும் சரியல்ல. அந்த கோவில் கட்டி கும்பாபிஷேகம் நடத்தியபோது நன்கொடை கொடுத்த நபர்களின் பெயர்கள் கல்வெட்டில் எழுதி கோவிலில் வைக்கப்பட்டது என்றால் கோவிலில் கல்வெட்டே கிடையாது. எனக்கும் எனது பங்காளிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் 2015 ம் வருடம் அந்த கல்வெட்டை நான் அகற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த கல்வெட்டு கோவிலில் இருந்தால் அதுபொதுக்கோவில் என்று தெரிந்துவிடும் என்பதற்காகவே அதை அகற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. தாவாசொத்திற்குரிய பட்டாவில் கோவில்பெயரும் Trustee என எனது பெயரும் உள்ளது என்றால் சரிதான். வாதிக்கோவில் சம்பந்தமாக ஏதாவது Trust ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அந்த பட்டாவில் பெயர் தவறாக இருந்ததால்தான் எனது பங்காளிகள்

வருவாய்த்துறையில் மனுகொடுத்தனர் என்றால் சரியல்ல. அந்த பட்டா பெயர்தவறு சம்பந்தமாக நான் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்குதாக்கல் செய்து அதில் தாவா சொத்திற்கு பட்டா பெயர்மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவு வழங்கப்பட்டது. நான் உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல்செய்த வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கோவில் பிரச்சனை சம்பந்தமாக அடிக்கடி நான் தாவா கோவிலை பூட்டிவிட்டுசென்றதால் பொதுமக்கள் 2ம் பிரதிவாதியிடம் மனுகொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் 2ம் பிரதிவாதி இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியை ஆய்வாளராக நியமித்தார் என்றால் சரியல்ல. தாவாசொத்து சம்பந்தமாக நாளதுதேதியில் எந்தெந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மதுரை உயர்நீதிமன்ற கிளை, கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் கோவில்பட்டி சார்பு நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து சம்பந்தமாக சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் நான்வழக்கு எதுவும் தாக்கல்செய்யவில்லை. இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி மாரியப்பன் மற்றும் எனது சித்தப்பா கோபால்கோனார் ஆகியோர்தான் சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்தார்கள். அந்த வழக்கில் நான் தரப்பினர் கிடையாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.